



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரஜப் பிறை 29 ஹிஜ்ரி 1437
Friday of Rajab 29th Hijri 1437
6th May 2016

| | |
|---|---|
| தலைப்பு: | அதிக நன்மை செய்தல்! |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | அதிக நன்மை செய்தல்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! திருக்குர்ஆன் ஓதுபவரை ஒளிமயமாக வைக்கிறான், தொழுகையாளிகளுக்கு மன ஆறுதலை தருகிறான், மிக தாராளமாக வாரி வழங்குபவர்களின் செல்வ வளங்களை அதிகப்படுத்துகிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(2:21)

يَا أَيُّهَا النَّاسُ اعْبُدُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ وَالَّذِينَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

"மனிதர்களே! உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த இறைவனையே நீங்கள் வணங்குங்கள். (அதனால்) நீங்கள் இறை அச்சமுடையவர்களாக ஆகலாம்"

**முஸ்லிம்களே**! நிச்சயமாக அல்லாஹ் தஆலா தன்னுடைய முஃமீனான அடியார்களுக்கு இலாபகரமான ஒரு வணிக முறையை வாக்களித்துள்ளான். அந்த அடியார்கள் இரவிலும் பகலிலும் தொடர்ந்து குர்ஆன் ஓதுவார்கள். மன்னிக்கக்கூடிய மேலான இறைவனின் திருப்பொருத்தத்தை பெறுவதற்காக தொழுகையை நிலை நாட்டுவார்கள். இந்த அடியார்கள் பகிரங்கமாகவும், கமுக்கமாகவும் தங்களுடைய செல்வத்தை நல்வழியில் தர்மம் செய்வார்கள். இவற்றை செய்பவர்களுக்கு அதற்கான கூலியை வழங்கிவிடுவதாக அல்லாஹ் வாக்குறுதி அளிக்கிறான். எந்த வித தங்கு தடையுமின்றி அவர்களுக்கான நற்பலன்களை மேலும் மேலும் பன்மடங்காக்கி தருகிறான். அவர்களின் பாவங்களை மன்னிக்கிறான். அவர்கள் செய்யும் சிறிய நற்செயலையும் அல்லாஹ் வீணடித்துவிடாமல் அதற்குரிய பலனை தந்துவிடுகிறான். ( : تفسير ابن كثير (545/6))



www.sunnathwaljamath.com

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (35:29-30)

إِنَّ الَّذِينَ يَتْلُونَ كِتَابَ اللَّهِ وَأَقَامُوا الصَّلاَةَ وَأَنْفَقُوا مِمَّا رَزَقْنَاهُمْ سِرًّا وَعَلاَنِيَةً يَرْجُونَ تِجَارَةً لَنْ تَبُورَ* لِيُوَفِّيَهُمْ أُجُورَهُمْ وَيَزِيدَهُمْ مِنْ فَضْلِهِ إِنَّهُ غَفُورٌ شَكُورٌ

"எவர்கள் அல்லாஹ்வுடைய வேதத்தை ஓதி, தொழுகையையும் கடைப்பிடித்து, நாம் அவர்களுக்கு அளித்தவைகளை இரகசியமாகவும் வெளிப்படையாகவும் தானம் செய்து வருகிறார்களோ அவர்கள் நிச்சயமாக என்றுமே நஷ்டமடையாத (லாபம் தரும்) ஒரு வர்த்தகத்தை எதிர்பார்க்கின்றார்கள். (அல்லாஹ்) அவர்களுக்கு அவர்களுடைய கூலியைப் பூரணமாகவே கொடுத்து தன்னுடைய அருளைக் கொண்டு பின்னும் அதிகமாகவும் கொடுப்பான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும் நன்றி செலுத்துபவர்களை அறிபவனுமாக இருக்கிறான்"

"திருக்குர்ஆனை ஓத வேண்டும்" என்பதிலிருந்தே இந்த வசனம் தொடங்குகிறது. திருக்குர்ஆனை ஓதுவது அதிக இலாபம் தரக்கூடிய வழமையாகும். பரிசுத்த நாயனின் நெருக்கத்தை பெற்றுத் தருவதில் ஏனைய வணக்கங்களை விட குர்ஆன் ஓதும் வழக்கமே முன்னிலை வகிக்கிறது. தொடர்ந்து திருக்குர்ஆனை ஓதி வர வேண்டும் என்று தன்னுடைய தூதர் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இறைவன் வலியுறுத்தி கூறியுள்ளான்: (29:45)

اتْلُ مَا أُوحِيَ إِلَيْكَ مِنَ الْكِتَابِ وَأَقِمِ الصَّلاَةَ

"(நபியே!) வஹ்யி மூலம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட இவ்வேதத்தை (மக்களுக்கு) நீங்கள் ஓதிக் காண்பித்து தொழுகையைக் கடைப்பிடித்து வாருங்கள்"

சர்வ வல்லமை படைத்த இறைவன் இந்த திருக்குர்ஆனை நமக்கு வழங்கியுள்ளான், புனித வசனங்கள் மூலம் தெளிவான பல அத்தாட்சிகளை இறைவன் விளக்குகிறான். எனவே நாம் இதனை ஓதிவருவதோடு, அதன் உட்கருத்துக்களை புரிந்து கொள்வதற்கும் முயற்சிக்க வேண்டும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (38:29)

كِتَابٌ أَنْزَلْنَاهُ إِلَيْكَ مُبَارَكٌ لِيَدَّبَّرُوا آيَاتِهِ وَلِيَتَذَكَّرَ أُولُو الأَلْبَابِ

"(நபியே!) இவ்வேதத்தை நாமே உங்கள்மீது இறக்கி வைத்தோம். இது மிக பாக்கியமுள்ளது. அறிவுடையவர்கள் இதன் வசனங்களை கவனித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறுவார்களாக!"

இந்த திருக்குர்ஆனில் இருந்து ஒரே ஒரு வார்த்தையை அல்லது எழுத்தை ஓதினால் கூட அதற்கான நற்பலனை அல்லாஹ் பன்மடங்காக பெருக்கித்தருகிறான். இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ قَرَأَ حَرْفًا مِنْ كِتَابِ اللَّهِ فَلَهُ بِهِ حَسَنَةٌ، وَالْحَسَنَةُ بِعَشْرِ أَمْثَالِهَا، لاَ أَقُولُ الم حَرْفٌ، وَلَكِنْ أَلِفٌ حَرْفٌ، وَلاَمٌ حَرْفٌ، وَمِيمٌ حَرْفٌ

"அல்லாஹ்வுடைய வேதத்தில் இருந்து ஒரே ஒரு எழுத்தை யார் ஒருவர் ஓதுகிறாரோ அவருக்கு அதற்கான நன்மை கிடைக்கும், ஒரு நன்மை என்பது அதைப் போன்று பத்து மடங்காக இருக்கும். "அலீப் லாம் மீம்" என்பதை ஒரே ஓர் எழுத்து என்று நான் கூற மாட்டேன், ஆனால் "அலீப்" என்பது ஓர் எழுத்தாகும், "லாம்" என்பது ஓர் எழுத்தாகும், "மீம்" ஓர் எழுத்தாகும்" (الترمذي : 2910)

பல்வேறு வகையான செல்வங்கள், புதையல்கள், மற்றும் பொக்கிஷங்களை வைத்திருப்பதைக் காட்டிலும் ஒரு வசனத்தை தெளிவாக ஓதக் கற்றுக் கொள்வதே மிகச் சிறந்ததாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَفَلاَ يَغْدُو أَحَدُكُمْ إِلَى الْمَسْجِدِ فَيَعْلَمُ، أَوْ يَقْرَأُ آيَتَيْنِ مِنْ كِتَابِ اللَّهِ عَزَّ وَجَلَّ خَيْرٌ لَهُ مِنْ نَاقَتَيْنِ، وَثَلاَثٌ خَيْرٌ لَهُ مِنْ ثَلاَثٍ، وَأَرْبَعٌ خَيْرٌ لَهُ مِنْ أَرْبَعٍ، وَمِنْ أَعْدَادِهِنَّ مِنَ الإِبِلِ

"உங்களில் எவர் ஒவ்வொரு நாள் காலையிலும் சந்தைக்கு சென்று பாவம் புரியாமலும், உறவைத் துண்டிக்காமலும் பருத்த திமில்கள் கொண்ட இரு ஒட்டகங்களுடன் திரும்பி வருவதை விரும்புவார்?" என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு, "நாங்கள் அனைவருமே அதை விரும்புவோம்" என்று நாங்கள் பதிலளித்தோம். அதற்கு இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "உங்களில் ஒருவர் காலையில் பள்ளிவாசலுக்குப் புறப்பட்டுச் சென்று அல்லாஹ்வின் வேதத்திலிருந்து இரு வசனங்களை கற்றுக் கொள்வது அல்லது ஓதுவது இரு ஒட்டகங்களை விடச் சிறந்ததாகும். மூன்று வசனங்கள் மூன்று ஒட்டகங்களை விடவும், நான்கு வசனங்கள் நான்கு ஒட்டகங்களை விடவும் சிறந்ததாகும். இவ்வாறு எத்தனை வசனங்கள் ஓதுகின்றாரோ அந்த அளவு ஒட்டகங்களை விடச் சிறந்ததாகும்" என்று கூறினார்கள். (مسلم : 803)

திருக்குர்ஆனை நாமும் ஓதக் கற்றுக் கொள்வதுடன் நம் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுப்பது எவ்வளவு மேலான அழகான நற்செயல். ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் இந்த திருக்குர்ஆனை உறுதியாக பிடித்துக் கொள்ளுங்கள். காரணம் இது இறைவன் அளிக்கும் விருந்தாகும். யாருக்கு இறைவனின் இந்த அருட்கொடையை அனுபவிக்கும் ஆற்றலும் வாய்ப்பும் இருக்கிறதோ அவர் அனுபவித்துக் கொள்ளட்டும். கற்றுக் கொள்வதின் மூலமே அறிவு வளர்ச்சி பெற முடியும்" (زوائد البزار : 92/1)

நாம் திருக்குர்ஆனை ஓதுகிற சமயத்தில் அல்லாஹ் நமக்கு சாட்சியாக இருக்கிறான். நாம் ஓதுவதையும் கவனிக்கிறான். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (10:61)

وَمَا تَكُونُ فِي شَأْنٍ وَمَا تَتْلُو مِنْهُ مِنْ قُرْآنٍ وَلاَ تَعْمَلُونَ مِنْ عَمَلٍ إِلاَّ كُنَّا عَلَيْكُمْ شُهُودًا إِذْ تُفِيضُونَ فِيهِ

"நீங்கள் என்ன நிலைமையில் இருந்தபோதிலும், குர்ஆனிலிருந்து நீங்கள் எ(ந்த வசனத்)தை ஓதியபோதிலும், (உங்களுடைய காரியங்களில்) நீங்கள் எதைச் செய்தபோதிலும், நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும்போதே உங்களை நாம் கவனிக்காமல் இருப்பதில்லை"

அதாவது நாங்கள் உங்களுக்கு சாட்சியாளர்களாக இருக்கிறோம், மேலும் நீங்கள் ஓதுவதையும் கேட்கிறோம். ((277/4) : تفسير ابن كثير)

திருக்குர்ஆன் ஓதுபவரை நோக்கி நாளை மறுமை நாளில் பின்வருமாறு கூறப்படும் என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் :

اقْرَأْ وَارْتَقِ وَرَتِّلْ كَمَا كُنْتَ تُرَتِّلُ فِي الدُّنْيَا، فَإِنَّ مَنْزِلَكَ عِنْدَ آخِرِ آيَةٍ تَقْرَؤُهَا

"நீ ஓது, பதவி உயர்வு பெறு, நீ உலகில் மிக அழகாக நயமாக ஓதியதைப் போன்று (இப்போதும்) நீ நயமாக ஓது, நீ ஓதும் வசனத்தின் இறுதியில் உம்முடைய கௌரவம் இருக்கிறது" (1466 : أبو داود)

**தொழுகையாளிகளே!** தொழுகைகளை மிக பேணுதலோடு உரிய நேரத்தில் சரிவர நிறைவேற்றி வர வேண்டும். அவ்வாறுதான் அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டுள்ளான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்: (2:238)

حَافِظُوا عَلَى الصَّلَوَاتِ وَالصَّلاَةِ الْوُسْطَى وَقُومُوا لِلَّهِ قَانِتِينَ

"(நம்பிக்கையாளர்களே!) அனைத்து தொழுகைகளையும் (குறிப்பாக) நடுத்தொழுகையையும் (நேரம் தவறாமல்) பேணி(த் தொழுது) கொள்ளுங்கள். மேலும், (தொழுகையில்) அல்லாஹ்வுக்குப் பயந்து மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள்"

தொழுகைகளை அதற்குரிய நேரத்தில் அனைத்து ஒழுக்கங்களையும் கடைப்பிடித்து மிகவும் பயபக்தியோடு நிறைவேற்ற வேண்டும் என்கிற அறிவுரை இந்த வசனத்தில் இருக்கிறது. எந்த கட்டத்திலும் கவனக்குறைவாக இருந்து விடக்கூடாது. ((208 /3) : تفسير القرطبي)

தமது வாழ்வின் இறுதி கட்டத்தில் தொழுகையைப் பற்றித்தான் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதிகம் வலியுறுத்தியுள்ளார்கள். "இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இறுதி பேச்சாக, "தொழுகை தொழுகை" என்றே அமைந்திருந்தது" என்று ஹஜ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். (2698 : وابن ماجه ، 5158 : أبو داود)

ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: யார் நாளை (மறுமை நாளில்) முஸ்லிமாக அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புகிறாரோ அவர் தொழுகை அறிவிப்புச் செய்யப்படும் இடங்களில் (பள்ளிவாசல்களில்) இந்தத் தொழுகைகளைப் பேணி(த் தொழுது)வரட்டும். ஏனெனில், அல்லாஹ் உங்கள் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நேரிய வழிகளைக் காட்டியுள்ளான். (கூட்டுத்) தொழுகைகள் நேரிய வழிகளில் உள்ளவையாகும். (654 : مسلم)



www.sunnathwaljamath.com

யார் தனது வீட்டில் மிக அழகிய முறையில் ஒழுச் செய்கிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ تَوَضَّأَ هَكَذَا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ، وَكَانَتْ صَلاَتُهُ وَمَشْيُهُ إِلَى الْمَسْجِدِ نَافِلَةً

"யார் இந்த முறையில் ஒழுச் செய்கிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும். மேலும் (அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டதால்) அவருடைய தொழுகையும், பள்ளிவாசலை நோக்கிய நடையும் அவருக்கு மேலதிகமான நன்மையாகவே இருக்கும்" ( : مسلم 566)

ஓர் அடியார் பள்ளிவாசலை நோக்கி நடந்து போகும்போது அவருடைய கௌரவம் உயர்ந்து கொண்டே இருக்கும். அவருடைய நன்மைகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ تَطَهَّرَ فِي بَيْتِهِ ثُمَّ مَشَى إِلَى بَيْتٍ مِنْ بُيُوتِ اللَّهِ؛ لِيَقْضِيَ فَرِيضَةً مِنْ فَرَائِضِ اللَّهِ كَانَتْ خَطْوَتَاهُ إِحْدَاهُمَا تَحُطُّ خَطِيئَةً، وَالأُخْرَى تَرْفَعُ دَرَجَةً

"தனது வீட்டிலேயே ஒருவர் (ஒழுச் செய்து) சுத்தமான பிறகு அல்லாஹ்வுடைய இல்லங்களில் ஓர் இல்லத்தை நோக்கி இறைவன் கடமையாக்கிய கடமையான தொழுகையை நிறைவேற்ற செல்கிறார். இவருடைய நடையில் ஓர் அடி (எடுத்து வைக்கும்போது) இவருடைய பாவம் அழிக்கப்படும், மற்றோர் அடி (எடுத்து வைக்கும் போது) இவருடைய கௌரவம் உயர்கிறது" ( : مسلم 1533)

பிறகு அல்லாஹ்விற்கு முன்னிலையில் தூய்மையான உள்ளத்தோடும், சுத்தமான உடலோடும் வரிசையில் நிற்க வேண்டும். இப்போது இவருடைய பிழைகள் மன்னிக்கப்படும். மற்றவர்களோடு தோளோடு தோள் சேர்த்து நின்று தொழ வேண்டும், அவர்களோடு சேர்ந்து ருகூ மற்றும் சுஜூத் செய்ய வேண்டும். கண்ணியம் நிறைந்த அல்லாஹ் தொழுகையாளிகளின் அணிவரிசைகளை கவனிக்கிறான். அவ்விடத்தில் நாம் பயபக்தியோடு இருக்க வேண்டும். அவனுக்கு கட்டுப்பட்டவர்களாகவும், அவனுடைய உத்தரவுகளை நிறைவேற்றும் அடியார்களாகவும், இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அறிவுரையை மிக உறுதியாக பின்பற்றுபவர்களாகவும் நாம் இருக்க வேண்டும்.

**அல்லாஹ்வின் அடியார்களே!** பரிசுத்த நாயனாகிய அல்லாஹ்விடம் இலாபகரமான வணிகம் இருக்கிறது. அதுதான் தர்மம் ஆகும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (2:261)

مَثَلُ الَّذِينَ يُنْفِقُونَ أَمْوَالَهُمْ فِي سَبِيلِ اللَّهِ كَمَثَلِ حَبَّةٍ أَنْبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِي كُلِّ سُنْبُلَةٍ مِائَةُ حَبَّةٍ وَاللَّهُ يُضَاعِفُ لِمَن يَشَاءُ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ

"(நபியே!) அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய பொருளைச் செலவு செய்கின்றவர்களுடைய (பொருளின்) உதாரணம், ஒரு வித்தின் உதாரணத்தை ஒத்திருக்கின்றது.

அ(ந்த வித்)து ஏழு கதிர்களைத் தந்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள் (ஆக எழுநூறு வித்துக்கள் அந்த ஒரு வித்திலிருந்து உற்பத்தியாயின.) அல்லாஹ், தான் விரும்பியவர்களுக்கு (இதை பின்னும்) இரட்டிப்பாக்குகின்றான். ஏனெனில், அல்லாஹ் (வழங்குவதில்) மிக்க விசாலமானவனும், மிக அறிந்தவனுமாகவும் இருக்கின்றான்"

யார் அல்லாஹ்விடம் இந்த வணிகத்தில் ஈடுபடுகிறார்களோ நிச்சயம் அவர் நாளை மறுமையில் அவனிடம் பன்மடங்கு கூலி பெற்று வெற்றி பெறுவார். இவ்வுலகிலும் அவருடைய செல்வ வளங்களில் அபிவிருத்தி ஏற்படும், செல்வங்கள் பெருகும். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (34:39)

وَمَا أَنْفَقْتُمْ مِنْ شَيْءٍ فَهُوَ يُخْلِفُهُ وَهُوَ خَيْرُ الرَّازِقِينَ

"நீங்கள் எதை தானம் செய்தபோதிலும் அவன் அதற்குப் பிரதி கொடுத்தே தீருவான். அவன் கொடையளிப்பவர்களில் மிக்க மேலானவன்"

திருக்குர்ஆனுடைய அறிவு ஞானம் யாருக்கு இருக்கிறதோ அவரைத் தவிர வேறு யாரும் தர்மங்கள் செய்யும் ஒரு கொடையாளியோடு போட்டி போடவோ அல்லது நிகராகவோ முடியாது. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ حَسَدَ إِلاَّ فِي اثْنَتَيْنِ: رَجُلٌ آتَاهُ اللَّهُ الْقُرْآنَ، فَهُوَ يَقُومُ بِهِ آنَاءَ اللَّيْلِ وَآنَاءَ النَّهَارِ، وَرَجُلٌ آتَاهُ اللَّهُ مَالاً، فَهُوَ يُنْفِقُهُ آنَاءَ اللَّيْلِ وَآنَاءَ النَّهَارِ

"இரண்டைத்தவிர வேறு எதிலும் பொறாமை இல்லை. அல்லாஹ் திருக்குர்ஆனுடைய அறிவை ஒரு மனிதருக்கு வழங்கியுள்ளான். அவர் அந்த குர்ஆனைக் கொண்டு இரவும் பகலும் நின்று வணங்கி (அதன்படி நிற்)கிறார். (பிறிதொரு) மனிதருக்கு அல்லாஹ் செல்வங்களை வழங்கியுள்ளான். அவர் அந்த செல்வத்தை இரவிலும் பகலிலும் (நல்வழியில்) செலவு செய்கிறார். (யார் மீதும் பொறாமை கூடாது ஆனால் இவ்விருவர்கள் மீது மற்றவர்கள் பொறாமை கொள்ளலாம்) (815: مسلم)

யா அல்லாஹ்! எங்களுக்கு திருமறையில் தெரியாதவற்றை எங்களுக்கு நீ கற்றுக் கொடு, நாங்கள் மறந்து கவனக்குறைவாக இருப்பவற்றை எங்களுக்கு நினைவூட்டு, தொழுகையை பேணி நடக்கும் அடியார்களாக எங்களை ஆக்கி வைப்பாயாக!! எங்களுடைய செல்வங்களை நற்காரியங்களுக்கு செலவு செய்யும் பாக்கியத்தை தருவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! மே மாதம் ஆறாம் தேதி நமது ஐக்கிய அரபு அமீரகத்திற்கு முக்கியமான நாளாகும். நமது இராணுவப்படையின் வீர தீரம் நிரூபிக்கப்பட்ட நாளாகும்.

தங்கள் அர்ப்பணிப்பு உணர்வை வெளிப்படுத்திய நாளாகும். இவர்களின் ஆற்றலும் செயல்திட்டங்களும் இலக்கை நோக்கி துரிதமாக பயணித்த நாளாகும். ஒரு தேசத்தின் அமைதியை நிலைநாட்டி குழப்பங்களை முற்றிலும் களைந்து விடுவதற்கான அவர்களின் முயற்சிக்கு அடையாளம் கிடைத்த நாளாகும். மார்க்கத்திற்கும், தேசத்திற்கும், பொது மற்றும் தனிநபர் சொத்திற்கும் உரிய பாதுகாப்பை வழங்கினார்கள். தேசத்தின் பொருளாதாரத்திற்கும், நிலையான அமைதியான அரசியல் அமைப்பிற்கும் உறுதுணையாக இருந்தார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (8:60)

وَأَعِدُّوا لَهُمْ مَا اسْتَطَعْتُمْ مِنْ قُوَّةٍ وَمِنْ رِبَاطِ الْخَيْلِ تُرْهِبُونَ بِهِ عَدُوَّ اللَّهِ وَعَدُوَّكُمْ

"அவர்களை எதிர்ப்பதற்காக (ஆயுத) பலத்தையும், லாயத்தில் (திறமையான) குதிரைகளையும், உங்களுக்கு சாத்தியமான அளவு நீங்கள் (எந்நேரமும்) தயார்படுத்தி வையுங்கள். இதனால் அல்லாஹ்வுடைய எதிரிகளையும், உங்களுடைய எதிரிகளையும் நீங்கள் பயப்படச் செய்யலாம்"

வலுவான இந்த இராணுவ கூட்டமைப்பையும் அதன் தியாகங்களையும் நாம் கண்ணியப்படுத்தும் விதமாக அவர்களின் பெருமைகளையும், உண்மையான அக்கறையையும் இந்த நாளில் நாம் நினைவு கூற இருக்கிறோம். இவர்கள் தங்கள் தாயகத்தை காப்பதற்காக தங்களின் உயிர்களைக் கூட தியாகம் செய்கிறார்கள். தேசத்தின் கண்ணியத்தையும் பெருமையையும் நிலைநாட்டியவர்கள். மண்ணின் மாண்பை காத்தவர்கள். தேசத்தின் வளர்ச்சியையும், பொருளாதாரத்தையும் கட்டிக் காத்தவர்கள். உண்மையான உழைப்பாலும், அர்ப்பணிப்பு உணர்வாலும் இதை செய்து முடிக்கிறார்கள். கடமை உணர்ச்சி மிக்கவர்கள். ஆற்றலை அதிகப்படுத்திக் கொண்டே நேர்த்தியான முறையில் தங்கள் செயல்திட்டங்களை நடைமுறை படுத்துபவர்கள்.

தேசத்திற்காகவும் பொது அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் உயிர்த்தியாகம் செய்த இவர்களுக்கு மறுமையில் எண்ணற்ற சிறப்புகளை அல்லாஹ் வழங்குவான். இவர்களின் குருதிகள் மிகவும் தூய்மையானதாகும், இவர்களின் உயிர்கள் மேன்மை பெற்றவை. எல்லாம் வல்ல ஏக இறைவன் உயிர்தியாகிகளைப் பற்றி கூறுகிறான்: (57:19)

وَالشُّهَدَاءُ عِنْدَ رَبِّهِمْ لَهُمْ أَجْرُهُمْ وَنُورُهُمْ

"ஷஹீது" எனப்படும் சன்மார்க்கப் போரில் உயிர்த்தியாகம் செய்தவர்கள் தங்கள் இறைவனிடத்தில் இருப்பார்கள். மேலும், அவர்கள் அனைவருக்கும் அவர்களுடைய கூலியும் உண்டு. (நேரான வழியை அறிவிக்கக் கூடிய) பிரகாசமும் உண்டு"

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)



www.sunnathwaljamath.com

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும்**

**பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.
யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com